03.06.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.17

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பத்மநாபன் | | |
| த/பெ | ராமசந்திரமூர்த்தி | | |
| கிராமம் | டி புதுப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 42/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிசெய்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு விழுப்புரம் காவல் நிலைய இருப்புப்பாதை காவல் நிலையத்தில் காவலராக பணி செய்து வந்தபோது கடந்த 05.05.2014, 06.05.2014 அந்த 2 தினங்களிலும் தற்செயல் விடுப்பில் இருந்தேன். நான் என் ஊரில் பக்கத்து ஊரை சேர்ந்த அன்றாயநல்லூரை சேர்ந்த செல்வராஜ் மகன் ராம்குமார் என்பவர் மும்பை செல்லும் வழியில் இரயிலில் இருந்து தவறி விழுந்து இறந்து விட்டதாகவும் அதற்கு உதவியாக இருக்க என்னை அழைத்ததன் பேரில் ஆந்திராவில் உள்ள ஏர்ரகுண்டல இரயில்வே ஸ்டேசன் மற்றும் அரசாங்க மருத்துவமனையில் வேலையை முடித்து விட்டு திரும்பும் வழியில் அவர்கள் என்னை திருவண்ணாமலையில் இறக்கி விட்டுவிட்டு அவர்கள் சொந்த ஊர் சென்றார்கள். நான் வீட்டிற்கு வந்தபோது இரவு சுமார் 23.30 மணிக்கு விழுப்புரம் வந்து பேரங்கியூரில் உள்ள மாமனார் வீட்டிற்கு செல்ல வந்து நான் அன்று இரவு விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் விட்டு விட்டு சென்ற எனது மோட்டார் சைக்கிளை எடுக்க சென்றபோது அங்கு காவல் நிலைய பாராகாவலர் பாரதிதாசன் மற்றும் உதவி ஆய்வாளர் ராஜன், 1ம் எதிரி திருக்குமரன், 2ம் எதிரி

பாலமுருகன் மற்றும் 2 நபர்கள் காவல் நிலையத்தில் இருந்தனர். பாராகாவலர் பாரதிதாசன் இந்த நேரத்தில் நீங்கள் எங்கே சென்று வருகிறீர்கள் என்று கேட்க அந்த விவரத்தை சொல்லி விட்டு காவல்நிலையத்தில் அந்த 2 பேரை பற்றிய விவரம் கேட்டேன். திருட்டில் வழக்கில் விசாரிக்க வைத்திருப்பதாக கூறினார். பிறகு நான் என் மோட்டார் சைக்கிளை எடுத்துவிட்டு என் வீட்டிற்கு சென்று விட்டேன். மறுநாள் 07.05.2014 ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் பணிக்கு காவல் நிலையம் வந்தேன். அப்போது உயர் அதிகாரிகள் விசாரித்து கொண்டிருந்தார்கள். காவல் நிலையத்தில் ஒரே பரபரப்பாக இருந்தது. இது சம்மந்தமாக அங்கு இருந்தவர்களை விசாரிக்க காவல் நிலையத்தில் விசாரணைக்கு வைத்திருந்த ஜெயவேல் என்பவரின் உடல் நிலை சரியில்லாததால் அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் இறந்து விட்டதாகவும், அதுசம்மந்தமாகதான் விசாரணையில் பரபரப்பு காணப்பட்டது என்றும் சொன்னார். ஜெயவேல் சம்மந்தமாக இதற்கு முன்பு எந்தெந்த சம்பவங்கள் நடைபெற்றது என்றும் இதற்கு முன்பு எப்போது ஜெயவேல் இருப்புப்பாதை காவல் நிலையத்தாரால் விசாரணை செய்யப்பட்டார் என்றும், ஜெயவேல் தரப்பில் இருந்து இருப்புபாதை காவல் நிலையத்தார் மீது புகார்கள் வந்தது என்றும் யாரும் சொல்லவில்லை. மேற்படி சம்பவங்கள் குறித்து சிபிசிஐடி விழுப்புரம், வேலூர் ஆய்வாளர்கள் விசாரணை செய்தார்கள். நான் தெரிந்த விவரங்களை சொல்லியுள்ளேன்.

1முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.